**23.01.2026.**

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.191/2025</u>

அ.சா.**2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேசன் | | |
| த/பெ | கிருஷ்ணன் | | |
| கிராமம் | ஜானகிபுரம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 63/2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 23.01.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் பாதுகாப்பு துறையில் பணியாற்றி ஓய்வு பெற்று விட்டேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு என்ன தெரியும் என்றால், அன்று காலை நான் எழுந்து பார்த்தபோது, வீடு எரிந்து விட்டிருந்தது. அது மட்டும் தான் எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையது அல்ல. இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்யவில்லை.

<u>(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)</u>

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

கடந்த 01/06/2023-ம் தேதி வீரபத்திரன் என்பவர் சிவகங்கா என்பவரின் கூரை வீட்டை கொளுத்தி நாசம் செய்த வழக்கு சம்பந்தமாக, விழுப்புரம் தாலுக்கா காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் 02/06/2023 ம் தேதி காலை, வீடு எரிந்த சம்பவ இடமான சிவகங்கா என்பவரின் எரிந்து போன கூரை வீட்டின் முன்பு, நானும், எங்கள் ஊர் முகமது தாஹிர் என்பவரும் இருந்தபோது, சம்பவ இடம் குறித்து விசாரணை செய்து ஒரு பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றும், மேலும் 9.00 மணியளவில் சம்பவ இடத்திலிருந்து எங்கள் முன்னிலையில் எரிந்த வீட்டிலிருந்து பாதி எரிந்தும், எரியாமலும் உள்ள வைக்கோல் சிறிதளவு, எரிந்தும், எரியாத நிலையில் உள்ள துணி சிறிதளவு, முழுவதும் எரிந்த நிலையில் உள்ள மர கை துண்டுகள் சிறிதளவு, ஆகியவைகளை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார் என்றும், அதிலும் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றும், தற்போது எதிரி கேட்டுக்கொண்டதன் பேரில், உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

மறுவிசாரணை

இல்லை